Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; சங்.30:11. நவம்பர் 2025 No.11

கிறிஸ்துவில் நிலைத்திருப்பது எப்படி?

How to Abide in Christ

Harriet Beecher Stowe (1811 - 1896)

கிறிஸ்துவோடோ அல்லது கிறிஸ்துவிலோ வாழும்போது விழிப் புணர்வு, ஜெபம், பயபத்தி, பொறுமை, சாந்தகுணம், போன்ற இனிய பண்புகள் நம்மில் காணப்படுவதால் உண்மை யான விடுதலை வாழ்வைப் பெற்றுக் கொள்கிறோம்.

யோவான் 15-ம் அதிகாரத்தில் ஆக்கியோன் பயன்படுத்தும் உருவகத் தைப் பார்க்கிறோம். "...கொடி யானது திராட்சச் செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள்" யோவா.15:4. ஒரு கொடி எப்படி கனி கொடுக்கிறது? சூரிய ஒளி, காற்று போன்றவை தொடர்ச்சியாகக் கிடைப்பதாலோ, அல்லது புத்துயி ரளிக்கும் விதவிதமான தாக்கங்களால் மலர்களில் அழகு ஏற்படுவதாலோ அழகிய இலைகளாலோ அல்ல, அது செடியில் நிலைத்திருப்பதால் மட்டுமே. அது அமைதியாக எந்தச் சலனமுமில் லாமல் செடியோடு நிலைத்திருக்கிறது. எனவே மலர்களும் கனிகளும் தன்னிச்சை யாகவே நன்கு வெளி வருகின்றன.

ஒரு கிறிஸ்தவன் எப்படி கனி தர முடியும்? பலவித முயற்சிகள்துன்பங்கள் இவற்றின் மூலமாக கனி தர முடியுமா? தியானம், விழித்திருந்து ஜெபித்தல், சோதனைகளையும் ஆபத்துகளையும் மேற்கொள்ளுவதாலா? இல்லை, வாழ்க் கையில் முழு அர்ப்பணிப்பும், கிறிஸ்து வின் மேல் பாசம், வாழ்வு முழுவதையும் ஆண்டவருக்காக தியாகம் செய்தல் மற்றும் தேவனுடைய கிருபைக்காக தொடர்ந்து காத்திருக்குதல் ஆகியவை கனிதரும் வாழ்வுக்கு அனுகூலமானவை.

இப்பண்புகள் காணப்படக் கூடிய கிறிஸ்தவர்கள் உறுதியாக செடி யுடன் இணைக்கப்பட்டவர்கள். அவர்கள் தாயின் அரவணைப்பில் அமைதியாகத் தூங்கும் குழந்தைகளுக்கு ஒப்பான வர்கள். கிறிஸ்து அவர்களை அவர்களது கடமை, அதற்குரிய காலம், இடம் ஆகியவற்றை நினைப்பூட்டி தவறுகளில் கண்டித்து, கஷ்டங்களில் ஆலோசனை தந்து, தேவையான பணிகளில் உற்சாகப் படுத்தி வழி நடத்துகிறார். ஆவிக்குரிய மற்றும் சரீர தேவைகளுக்காக அடுத்த நாளுக்குரிய கவலை அவர்களுக்கில்லை. ஏனெனில் இன்று போல நாளைய தினத் தையும் தேவன் அன்புடன் கவனிப்பார் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்களது நம்பிக்கையும் விசுவாசமும் தேவன் எதை விரும்புகிறார், எவை களைத் தங்களுக்காகச் செய்வார்என்பதில் மாத்திரம் இருக்கிறது. அவருக்காகத் தாங்கள் எதைச் செய்ய விரும்புகிறோம் என்று அவர்கள் எண்ணுவதில்லை. ஒவ்வொரு சோதனை வேதனையிலும் அவர்களது வெற்றி மறுபடியும் மறு படியும் ஒரு குழந்தையைப் போல தங்களை முழுவதுமாக ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதில் ஏற்படுகிறது. ஒரு குழந்தை எந்தக் கஷ்டத் திலும் தாயின் மடியில் பாதுகாவலைத் தேடுவது போல அவர்கள் தேவனையே சார்ந்து வாழ்கிறார்கள்.

"உண்மையாகவே இது ஒரு மிகுந்த சந்தோஷமான உணர்வு நிலை, ஆனால் இதைப் பெற்றுக் கொள்வது எப்படி? எப்படி இதனை ஆரம் பிப்பது?"என்று சிலர் கேள்வி எழுப்பலாம். ஒரு பாவி கிறிஸ்தவ வாழ்வை ஆரம் பிப்பது போலவே ஆரம்பிக்க வேண்டும். இரட்சகரிடம் வந்து, தனது உடல், ஆத்துமா, ஆவி அனைத்தையும் முற்றி லும் வருங்காலத்துக்கும் இரட்சகரு டைய வழி நடத்துதலுக்கு ஒப்படைக்க வேண்டும். இந்த பொதுவான அர்ப் பணிப்புக்குப் பின் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

இவ்விதமாக ஒரு நாளை கட்டுப் பாட்டுடன் செலவு பண்ணுகிறோம். அடுத்தநாள் காலை அந்த நாளை கிறிஸ்துவின் பராமரிப்புக்கு ஒப்படைக் கிறீர்கள். அன்று முதல் சோதனையாக சமயத்தை வீணாய் செலவழிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் நேரிடுகிறது. உடனடி யாக, **"ஆண்டவரே இந்த குறிப்பிட்ட சூழலில் எனக்கு உதவி செய்யும்"** என்று ஜெபியுங்கள். அடுத்து உங்களை எரிச்சலூட்டும் ஒரு சம்பவம் நடக்கலாம். அதற்காகவும் ஆண்டவரிடம் செல்லுங்கள். சில மணி நேரங்களுக்குப் பிறகு ஒரு அயலாரைக் குறித்த ஒரு குறிப்பினைக் கூற சோதனை ஏற்படலாம். இயேசுவை சார்ந்து கொள் ளுங்கள். சில நிமிடங்களுக்குப் பிறகு நீங்கள் உங்களையே மறந்து சில கடின மான வார்த்தைகளை பேசி விடலாம். உடனே கிறிஸ்துவுக்கு நேராகத் திரும்பி உங்கள் தவறை அறிக்கையிட்டு உதவிக் காக நாடுங்கள். அசாதாரணமான கஷ்டங்கள் சோதனைகளால் உங்கள் நிலை மாறி விட்டால் சிறிது நேரம் அமைதியாகி பின்பு இயேசுவிடம் உதவி கேளுங்கள்.

உங்கள் துன்பங்கள் குழப்பங் களில் எப்படிப்பட்டவைகளாயிருந் தாலும் எல்லாவற்றிலும் உங்களை நடத்துகிறவர் தேவன். உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் தேவன் அக்கரையுள்ளவர். சில வேளை களில் சிறிய காரியங்களுக்காக அவரைத் தேடாமல் விட்டுவிடுவது சரியல்ல.

ஒவ்வொரு நாளும் நடைபெறும் சின்னச்சிறு விபத்துக்களும் மிகச்சிறிய கவலைகளும் ஏற்படும்போது அவற்றைப் பெரிது படுத்தாமல் கிறிஸ்துவின் சிந்தை யோடு கடந்து செல்ல வேண்டும். ஏதேனும் வித்தியாசமான தவறுகள் உங்கள் மனதில் கொண்டு வரப்பட்டால் அவற்றைப் பரிசோதித்து கற்றுக் கொள்ள வேண்டியவற்றைக்கற்றுக்கொள்ளுங்கள். தேவனுடைய பொறுமை உங்களுக்குப் பாடமாகட்டும். நீங்கள் பெருமையுள்ள வர்களாயிருந்தால் அவரது தாழ்மையைக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள்உலகத்தாரா யிருந்தால் உலகத்திற்கு வந்த அவரைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் நிர்விசாரிகளாயிருந்தால் உற்சாகமாக செயல்படுகிறவர்களைப்பாருங்கள். அவர் களைக் குறித்து கற்றுக் கொண்டு ஞாப கத்தில் வைத்து ஜெபித்து அதே ஆவியை உங்களுக்கு அருளும்படி ஜெபியுங்கள்.

பல காரியங்களை நாம் கற்றுக் கொண்டாலும் விசுவாசத்தைக் குறித்து நமக்குக் கற்றுத் தருபவர் ஆண்டவர். அவரிடம் சென்று உங்களை வழிநடத்தக் கேளுங்கள். அவர் உங்களை சாந்தமும் தாழ்மையுமுடையவராகவும் அவரைப் போல் அழகுள்ளவராகவும் மாற்றுவார். அவரில் நிலைத்திருப்பதைக் குறித்தும் அவர் வரும் போது அவரோடு வாசம் செய்வதைக் குறித்தும் தெளிவாக்குவார்.

உங்கள் கிறிஸ்தவ ஓட்டம் அன்பும் சந்தோஷமும் நிறைந்து காணப் படும். ஒரு கைதியின் நெருக்கடி போலல்ல, உங்கள் வாழ்வு சிறகடித்து பறக்கும் ஒரு பறவை போல சுயாதீன மாயிருக்கும். உங்களுக்கு முன்னாக வைக்கப்பட்ட ஓட்டத்தை பொறுமை யோடு ஓடுவீர்கள். நெகேமியா 8:10 -ன் படி கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலனாயிருக்கும்.

உள்ளே...

பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும் திராட்சத் தோட்டங்களையும் ஆடு மாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் எரேமியா 33:6.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜெபக்குறிப்பு 7. ***உலக நாடுகளுக்காக***

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் மாற்கு 16:15,16.

உலக நாடுகளுக்காக ஜெபிப்பதற்காக வெளியிடப் பட்ட ஒரு ஜெப கையேடு புத்தகத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்று நாம் உலக நாடுகளுக்காக ஜெபிக்க வேண்டியது மிகவும் அவசரம், அவசியம், ஏனென்றால் உலக நாடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. ரஷ்யா உக்ரைன் யுத்தம், இஸ்ரவேல் பாலஸ்தீனர்கள் யுத்தம், இந்தியா பாகிஸ்தான் யுத்தம் என்று உலக நாடுகள் வரலாறு காணாத விதத்தில், ஏதாவது ஒரு விதத்தில் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

ஊடகங்கள் வழியாக உலகமெங்கும் நடக்கும் சம்பவங்களை நாம் காண்கிறோம். எனவே தேவனுடைய பிள்ளைகள் உலக நாடுகளுக்காக ஜெபியுங்கள்.

பின்பு, அவர் ஒலிவ மலையின்மேல் உட்கார்ந் திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? **உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?** எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு; நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப் பார்கள்.

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது.

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; ***பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.***

இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் மத்தேயு 24:3-8 என்றார்.

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0438700**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

நான் காணிக்கை வாங்குகிறதில்லை என்று சொன்ன தீர்க்கதரிசி

...இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றான்.

அதற்கு அவன் நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான் 2இராஜா.5:15,16.

1. ஒரு சிறு பெண் செய்தது

சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு ***கர்த்தர்*** சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.

சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்.

அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.

அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான் 2 இராஜா.5:1-4.

2. சீரியாவின் ராஜா செய்தது

அப்பொழுது சீரியாவின் ராஜா: நல்லது போகலாம், *(3-ம் பக்கம் பார்க்க)*

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந்தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் தன் கையிலே ***பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறை பொன்னையும், பத்து மாற்று வஸ்திரங்களையும்*** எடுத்துக் கொண்டு போய்,

இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டு வருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது 2 இராஜா.5:5,6.

3. இஸ்ரவேலின் ராஜா செய்தது

இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்த போது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிட வேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்றான்.

இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்ட செய்தியைத் தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்து கொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான் 2 இராஜா.5:7,8.

4. நாகமான் செய்தது

அப்படியே ***நாகமான்*** தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.

அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், ***யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு***; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்.

அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு, புறப்பட்டுப் போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்.

நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான் 2இராஜா. 5:9_12.

5. அவன் ஊழியக்காரர் செய்தது

அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்.

அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகின போது, அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான் 2 இராஜா.5:13,14.

6. தீர்க்கதரிசி செய்தது

அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றான்.

அதற்கு அவன்: நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான் 2 இராஜா.5:15,16.

7. கேயாசி செய்தது

தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் ***கேயாசி*** என்பவன், அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்; நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு,

நாகமானைப் பின்தொடர்ந்தான்; அவன் தன் பிறகே ஓடிவருகிறதை நாகமான் கண்டபோது, அவனுக்கு எதிர்கொண்டுபோக இரதத்திலிருந்து குதித்து சுகசெய்தியா என்று கேட்டான்;

அதற்கு அவன்: சுகசெய்திதான்; தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான்.

அதற்கு நாகமான்: தயவுசெய்து, இரண்டு தாலந்தை வாங்கிக்கொள் என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு பைகளில் இரண்டு மாற்று வஸ்திரங்களோடே கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்து போக, தன் வேலைக்காரரான இரண்டு பேர்மேல் வைத்தான்.

அவன் மேட்டண்டைக்கு வந்த போது, அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து, அந்த மனுஷரை அனுப்பிவிட்டான்; அவர்கள் போய்விட்டார்கள்.

பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்; கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான்.

அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வரத் தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிற போது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா? **பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும் திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?**

ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போனான் 2 இராஜா. 5:20_27.

கேயாசி போல தண்டிக்கப்பட்ட 3 பேர்

1 மிரியாம்

எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி:

கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.

மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.

சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்று பேரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டு வாருங்கள் என்றார்; மூன்று பேரும் போனார்கள்.

கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள்.

அப்பொழுது அவர்: என் வார்த்தையைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்.

என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, ***என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.***

நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது; அவர் யோய்விட்டார்.

மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப் போயிற்று; **மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்**; ஆரோன் மிரியாமைப் பார்த்த போது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.

அப்பொழுது ஆரோன்மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்.

தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்து விழுந்த பிள்ளையைப் போல அவள் ஆகாதிருப் பாளாக என்றான்.

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.

கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோல வே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக் கொள்ளப்படக்கடவள் என்றார் *எண்.12:1-14.*

2 யூதாஸ்காரியோத்து

அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

அந்த பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,

கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக் கொடுத்த ***யூதாஸ்காரியோத்து*** என்பவைகளே மத்தேயு 10:1-4.

அப்பொழுது அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு; அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்து;

குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன் பாடு என்றார்கள்.

அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்று கொண்டு செத்தான் மத்தேயு 27:3-5.

3 அனனியா

அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவி யாகிய சப்பீராளும் தங்கள் காணி யாட்சியை விற்றார்கள்.

தன் மனைவி அறிய அவன்கிரயத் திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தல ருடைய பாதத்திலே வைத்தான்.

பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பின தென்ன?

அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான்.

அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவ ருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக் கொண்டுபோய், அடக்கம் பண்ணி னார்கள்.

ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள்.

பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர் கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத் தான் என்றாள்.

பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணின வர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான்.

உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப் போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக் கொண்டு போய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணி னார்கள்.

சபையாரெல்லாருக்கும், இவை களைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று அப்.5:1-11.

தேவனுடைய ஆலோசனை

1. போதுமென்கிற மனது: போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்.

உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றி ருக்கக்கடவோம் 1 தீமோ.6:6-8.

2. பண ஆசை தீமை: ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேத னைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் 1 தீமோ.6:9,10.

3. இவைகளை விட்டோடு: நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தி யையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு 1 தீமோ.6:11.

4. நல்ல போராட்டத்தைப் போராடு: விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய் 1 தீமோ. 6:12.

5. தேவன் மேல் நம்பிக்கைவை: இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், 1 தீமோ.6:17.

6. தாராளமாய்க் கொடு: நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும், 1 தீமோ.6:18.

7. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்: நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.

ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.

சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப் போனார்கள். கிருபையானது உன்னோடே கூட இருப்பதாக, ஆமென் 1 தீமோ.6:19-21.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

வருகையின் தூதன்
ஜெப நேரம்
பகல் 1.00 முதல் 2.00 வரை

கிறிஸ்துவை உங்கள் பெலனாகக் கொண்டு அவரில் நிலைத்திருங்கள்

Abide in Christ, As your strength

Andrew Murray

"…. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" மத்.28:18.

"….கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" எபேசி.6:10.

"…. பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" 2 கொரி.12:9.

கிறிஸ்தவன் தனது பலவீனத்தை மறக்க அடிக்கடி முயற்சிக்கிறான், ஆனால் நாம் அதை ஞாபகப்படுத்திக் கொள்ளவும் ஆழமாக உணரவும் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். கிறிஸ்தவனோ தனது பலவீனத்தை மேற்கொள்ளவும் அதிலிருந்து விடுதலை பெறவும் விரும்புகிறான். தேவனோ நாம் அதில் இளைப்பாறவும் களிகூரவும் கூட விரும்புகிறார். கிறிஸ்தவன் தனது பெலவீனத்தில் புலம்பிக் கொண்டிருக்கும் போது கிறிஸ்து தமது அடியார்களை "பலவீனத்தில் களிகூருவேன், அதிக சந்தோஷமாக மேன்மை பாராட்டுவேன்" என்று கூறும்படி போதிக்கிறார். தனது வாழ்விலும், தேவனுக்குச் செய்யும் பணிவிடையிலும் பெலவீனம் பெரிய நடை என்று கிறிஸ்தவன் எண்ணினாலும் தேவனோ பெலனுக்கும் வெற்றிக்கும் இரகசியம் பலவீனம் என்கிறார். தேவன் நம்மிடம் கூறும் போது: "**உன் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும்**" என்கிறார்.

அவர் தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கச் சென்ற போது அவரது கடைசி வார்த்தைகளில் ஒன்று: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்பதாகும். தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தது போல அவர் வல்லமையால் போர்த்தப்பட்டது புதியதும் உண்மையுமான அனுபவமாகும். சர்வ வல்லமை கிறிஸ்து இயேசுவாகிய மனிதருக்குள் ஒப்படைக்கப்பட்டு மனிதர் மூலமாக அதன் பலத்த சத்துவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே அவர் பெற்றுக் கொண்டவற்றை சீஷர்கள் பெற்றுக் கொள்ளப் போவதாக வாக்குப் பண்ணினார். எனவே லூக்.24:49; அப்.1:8 ஆகிய வசனங்களின்படி அவர் வானத்திற்கு எழுந்தருளிய போது உன்னதத்திலிருந்து வரும் பெலனால், அவர்கள் தரிப்பிக்கப்பட்டார்கள். இதுவே ஒரு விசுவாசி வாழ்வுக்காகவும் பணிக்காகவும் சர்வ வல்லமையுள்ள இரட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பெலன்.

சீடர்கள் வல்லமையைப் பெறுகிறார்கள்

தேவனுடைய பாதப்படியில் சீடர்கள் பத்து நாட்கள் ஆராதனை செய்து காத்திருந்தார்கள். அவர்கள் அவரில் விசுவாசம் வைத்து, இரட்சகராக ஏற்றுக் கொண்டு, கர்த்தராகப் புகழ்ந்து ஒரு நண்பராக அன்பு வைத்தார்கள். அவரை எஜமானாக சேவிக்க ஆயத்தமானார்கள். இயேசுகிறிஸ்துவே அவர்கள் எண்ணங்களில் ஒருவராகவும் சந்தோஷப்பட்டு அன்பு கூரக்கூடியவராகவும் இருந்தார். இவ்வாறு விசுவாசமும் தேவ பயமும் நிறைந்த அவர்கள் ஆத்துமா தேவனோடு நெருங்கிய உறவைப் பெற்றுக் கொண்டது. அவர்கள் ஆயத்தமாகியதும் வல்லமையின் ஸ்நானம் அவர்கள் மேல் வந்தது. அந்த வல்லமை உள்ளேயும் அவர்களைச் சுற்றிலும் காணப்பட்டது.

அவர்கள் தங்களை அர்ப்பணித்த பணிக்கு அந்த வல்லமை தகுதிப் படுத்தியது. கண்களுக்குப் புலப்படாத கர்த்தரை தங்கள் வாழ்வினாலும் வார்த்தைகளினாலும் சாட்சியாக அறிவித்தார்கள். அவர்களது முக்கிய சாட்சி பரிசுத்தமான ஒரு வாழ்க்கையாயிருந்தது. அதன் மூலம் பரலோகத்தையும் கிறிஸ்துவையும் வெளிப்படுத்தினார்கள். அந்த வல்லமை அவர்களுக்குள் தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், சுயம் பாவம் இவற்றின் மேல் வெற்றி தரவும், வாழும் அனுபவத்தின் மூலம் சிங்காசனத்திலிருக்கும் இயேசுவின் வல்லமையினை சாட்சியாக அறிவிக்கவும், மக்கள் இவ்வுலகில் பரிசுத்தர்களாக வாழவும் ஏதுவாயிருந்தது. இன்னும் சிலர் இயேசுவின் நாமத்தில் முழுவதுமாகப் பேசுவதற்கு அவர்களை வழிநடத்தியது. ஆனால் அனைவருக்குமே இந்த வல்லமை தேவையாயிருந்ததோடு அதைப் பெற்றுக் கொள்ளவும் செய்தார்கள். அதன் மூலம் இயேசு பிதாவின் அரசைப் பெற்றுக் கொண்டார் என்பது நிரூபிக்கப்பட்டது. அதோடு எல்லா அதிகாரமும் அவரது பிள்ளைகளுக்கு தூய வாழ்வு வாழவும் பயனுள்ள சேவை செய்யவும் கையளிக்கப்பட்டது. மேலும் தாங்கள் பெற்றுக் கொள்ள இருக்கும் தேவனுடைய அரசு வார்த்தையிலல்ல, பெலத்தில் இருப்பதை நிரூபித்தார்கள். தங்களுக்குள்ளே அந்த பெலனை பெற்றுக் கொண்டவர்கள் வெளியேயும் தங்களைச் சுற்றிலும் அதின் விளைவைக் கண்டார்கள். தேவனுடைய வல்லமை தங்களை தேவனுக்கு அர்ப்பணிக்காத வர்கள் கூட உணரக்கூடியதாயிருந்தது அப்.2:43; 4:13; 5:13.

நம்மில் கிறிஸ்துவின் வல்லமை

இந்த முதல் சீடருக்கு இயேசு எப்படிப்பட்டவராயிருந்தாரோ அப்படியே நமக்குமிருக்கிறார். நமது வாழ்வும் அழைப்பும் இந்த உத்திரவாத வார்த்தைகளிலிருந்து ஆரம்பிக்கிறது. "வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்குிறது". நம்மிலும் நம்மாலும் அவர் செய்கிறவைகளெல்லாம் அவர் சர்வ வல்லவரின் வல்லமையால் செய்கிறார். அவர் நம்மிடம் கேட்பதும் வேண்டிக்கொள்வதும் அதே வலிமையினால்தான். அவர் கொடுப்பதெல்லாம் அதே வல்லமையால் மட்டுமே. அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்கள் அனைத்தும், அவர் நிறைவேற்றுகிற வாக்குகளும் எல்லாக் கிருபை வரங்களும் அவரது வல்லமையின் விளைவுதான். சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசுவிடமிருந்து வருவதெல்லாம் இந்த வல்லமையின் முத்திரையை உடையது. மிகவும் பெலவீனமான விசுவாசியும் பாவத்திலிருந்து விலகியோடுவதில் உறுதியாயிருக்கவும், பரிசுத்தத்தில் வளரவும், அதிகக் கனிகளைத் தரவும் தெய்வீக வல்லமை உதவி செய்யக்கூடியது. இந்த வல்லமை இயேசுவிலுள்ளது. இயேசு தமது முழு நிறைவோடும் நம்மில் இருக்கிறார்.

நம்மில் கிறிஸ்துவின் வாழ்வு

இந்த வல்லமை எப்படி அளிக்கப்பட்டது என்று அறிய விரும்பினால் அதற்குரிய பதில் எளிமையானது. கிறிஸ்து தமது ஜீவனை நமக்குள் அளித்து, அவரது வல்லமையையும் அளித்துவிட்டார். அனேக விசுவாசிகள் எண்ணுவது போல அவர்களில் காணப்படும் பெலவீனமான ஜீவனை எடுத்து விட்டு அவர்களுக்கு சிறிதளவு பெலனை அவர்களது பெலவீன முயற்சிகளில் கொடுப்பதில்லை. அவர் தமது சொந்த ஜீவனை நமக்கு அளிப்பதால் நமக்கு வல்லமையை தருகிறார். தூய ஆவியானவர் உயர்த்தப் பட்ட ஆண்டவரின் இதயத்திலிருந்து நேரடியாக மகிமையின் பரம வாழ்வை அவர்களுக்குள் அளித்தார். எனவே அவரது ஜனங்கள் கர்த்தருக்குள் பெலனாகவும் அவரது சத்துவத்தில் வலிமையாகவும் காணப்படுவார்கள். அவர்களை அவர் பலப்படுத்தும் போது பெலவீனத்தின் உணர்வை எடுத்துப் போடுவது அல்ல அவ்விடத்தில் சத்துவத்தின் உணர்வு கொடுக்கப்படுகிறது. "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" 2 கொரி.4:7. பலவீனமும் பெலனும் "நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2கொரி.12:9,10) என்பதைப் புரிந்து கொள்ளும் போதுதான் இதை நாம் அறிக்கையிட முடியும்.

விசுவாசிக்கும் சீடன் சர்வவல்லவராகிய கிறிஸ்துவை அவர் சிங்காசனத்தில் வீற்றிருப்பவராக மட்டுமல்ல, தனது ஜீவனாகக் கொள்ளுவான். அவன் அதன் முடிவற்ற பரிபூரணம் தூய்மை ஆகியவை அதன் பெலத்தோடும் மகிமையோடும் மகிமைப்படுத்தப்பட்ட மனிதரில் வாழும் நித்திய வாழ்வு என கற்றுக் கொள்கிறான். அவன் தனது சொந்த உள்ளான வாழ்வை சிந்திக்கும் போதும், பரிசுத்த வாழ்வுக்காக வாஞ்சிக்கும் போதும் தேவனுக்குப் பிரியமாக வாழ முயற்சிக்கும் போதும், பிதாவின் பணியைச் செய்ய வல்லமைக்காக எதிர்பார்க்கும் போதும், மேலே பார்த்து, கிறிஸ்துவே தனது வாழ்வு என்று களிகூருகிறான். அவருடைய ஜீவன் தன்னில் முழுமையாகவும் வல்லமையாகவும் கிரியை செய்யும் என்று உறுதியாக நம்புகிறான். சிறிய பெரிய கஷ்டங்களிலும் தேவ வல்லமை

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்குப் போதுமானதாயிருக்கிறது. அவன் மிகுந்த ஆசீர்வாதமான ஒரு வாழ்க்கையை நடத்துகிறான். ஏனெனில் சத்துவம் நிறைந்த இரட்சகர் அவனில் கிரியை செய்ய அவன் எதிர்பார்க்கிறான்.

முக்கியமான பாடங்கள்

இந்த சிந்தனைகள் நமது செயல் முறை வாழ்க்கையில் கற்றுத்தரும் பாடங்கள் எளிமையானவைகளாயிருப் பினும் அவை விலையேறப் பெற்றவை. முதலாவது நமது பெலன் அனைத்தும் கிறிஸ்துவில் வைக்கப்பட்டு பயன்பாட் டிற்காகக் காத்திருக்கிறது. அது சர்வ வல்லமையின் ஜீவனாக அவரிலிருந்து நமது தேவைக்கு ஏற்ப பாய்ந்து வரக் கூடியதாக இருக்கிறது. அது சக்தியோடு அல்லது பலவீனமாகப் பாய்ந்து வந்தாலும் அது கிறிஸ்துவிடமிருந்துதான் பாய்ந்து வருகிறது. ஏனெனில் வானத் திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கே அளிக்கப்பட்டிருக்கிறது. இதை நன்கு கற்றுக்கொள்வோம். பிதா சகல அதிகாரத்தையும் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறபடியால் இயேசு ஒரு பரிபூரண இரட்சகர் என்று மனதில் கொள்வோமாக. நமது தேவைகளைப் பெற்றுக் கொள்ள அவர் தகுதியானவர்.

இரண்டாவது பாடம் என்ன வெனில் அவரோடு நெருங்கிய உறவு வைக்கும் போதுதான் இந்த வல்லமை நம்மில் பாய முடியும். இந்த உறவு பெலவீனப்படும்போது பாய்ந்துவரும் வல்லமையும் குறைவாகும். இந்த உறவு மகிழ்வோடு உயர்த்தப்படும் போதும் இந்த உறவை நிலைநிறுத்திக் கொள்வ தற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யும் போது இந்த வல்லமை நன்கு கிரியை செய்யும். அவருடைய பெலன் நம்மில் பூரணமாய் நமது பெலவீனத் தில் விளங்கும். எனவே நாம் நமது பெலனுக்காக கிறிஸ்துவில் நிலைத் திருப்பது அவசியம். நமது ஒரே கடமை கர்த்தரிலும் அவரது வல்லமையின் சத்துவத்திலும் பெலப்படுவதாகும்.

தேவனுடைய வல்லமையில் விசுவாசம் வைப்போமாக. அவர் எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமை யிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத் துக்கும் மேலாய் உயர்ந்தவர் எபேசி. 1:19-21. நமது விசுவாசம் அனுதினமும் சுயத்திலிருந்து விடுபட்டு கிறிஸ்துவின் வாழ்வுக்குள் நாம் முழுவதுமாக அவருக்கு அர்ப்பணிக்கப்படுவோம். அவர் அவரது சர்வல்லமையால் நம்மில் அவரது பணியைப் பரிபூரணப்படுத்துவாராக.

இவ்வாறாக நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் போது தூய ஆவியா னவர் தமது வல்லமையால் பெலமாகக் கிரியை செய்வார். "கர்த்தர் என் பெல னும் என் கீதமுமானவர்" சங்.118:14. "கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்ல மையும் உண்டு" ஏசா.45:24. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலிப்:4:13.

மேரி மான்சன் மற்றும் தேவனுடைய உத்தமம் - பகுதி 2

Marie Monsen and the faithfulness of God - Part 2

1929-ல் நார்வேஜியன் மிஷனெறி மேரி மான்சன் தேவனால் வட சீனாவின் எழுப்புதலுக்காக பயன்படுத்தப்பட்ட ஒரு மிஷனெறி. அவர்கள் கர்த்தருடைய கட்டளைப்படி ஒரு நீராவிக் கப்பலில் சீனாவின் கடற்கரை ஓரமாய் பிரயாணம் பண்ணும்போது அது கொள்ளையர் களால் பிடிக்கப்பட்டுவிட்டது. அதில் அவர்கள் மாத்திரமே அயல்நாட்டைச் சேர்ந்த மிஷனெறி. மற்ற பிரயாணி களின் உடமைகள் திருடப்பட்டு அவர் கள் அறைகளிலிருந்து அகற்றப்பட்டனர். அவர்கள் கட்டணம் கொடுத்து ஒரு சிறு அறையில் உட்கார்ந்திருந்தனர். அது ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்த அறை என்று அவர்கள் உணர்ந்தார்கள். இந்தக் கொள்ளையர்கள் முன்னால் தேவநாமம் மகிமைப்பட அதோடு பிற பிரயாணிகள் முன்பும் தேவநாமம் மகிமைப்பட அவர்கள் விரும்பினார்கள். தொடர்ந்து அவர்கள் கூறுவதைக் கேட்க லாம்.

கைக்கடிகாரம்

இறுதியில் சுமார் முப்பது வயது நிரம்பிய ஒரு கொள்ளையன் எனது அறையில் வந்தான். என்னிடம் கைக் கடிகாரம் இருக்கிறதா? என்று கேட்டான். நான் அவன் பார்க்கும்படி என் கரத்தை நீட்டி கைக்கடிகாரத்தைக் காண்பித்தேன். அவன் இரகசியமாக மெல்லிய குரலில், "**ஒளித்து வைத்துக் கொள்ளுங்கள், அல்லது இதை இழந்துவிடுவீர்கள்**" என்றான். நான் அதை அவிழ்த்து நான் தலையணையாக பயன்படுத்திய ஒரு கட்டு துணிமணிகளின் கீழ் வைத்தேன். அவன் என்னைப் பார்த்து விட்டு வெளியே சென்று விட்டான்.

சிறிது நேரம் சென்றதும் இன்னொருவன் உள்ளே நுழைந்தான். ஏறக்குறைய அவனது வயது பதினேழு அல்லது பதினெட்டாக இருக்கலாம்.

அவன் என்னைப் பார்த்து "**உங்களிடம் கைக்கடிகாரம் இருக்கிறதா**" என்று கேட்டான்.

"**ஆம் என்னிடம் இருக்கிறது**" என்றேன்.

"**அதை எனக்குத் தருவாயா?**" என்று கேட்டான்.

"**இல்லை நான் கொடுக்க முடியாது, ஏனெனில் இத்தனை விலையுயர்ந்த பொருட்களை அறியாத மக்களுக்கு நாங்கள் கொடுப்பது கிடையாது**" என்றேன்.

அவன் குதித்தெழுந்து கைத்துப் பாக்கி யை எனது நெற்றிக்கு நேராக நீட்டி "**உன்னைச் சுட்டு விடுவேன்**" என்று மிகுந்த ஆவேசத்துடன் கூறினான்.

"**இல்லை, நீ விரும்புகிறபடி நீ எப்போதும் செய்ய முடியாது**". என் தேவன் இப்படி சொல்லியிருக்கிறார்: "**உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் .... இது கர்த்தருடைய ஊழியக் காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்**" ஏசா.54:17. அவனிடம் அதன் பொருளை விளக்கினேன். அவன் என்னைச் சுடும் முன்னதாக ஜீவனுள்ள தேவன் அவனுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதைக் கூறினேன்.

மறுபடியும் அவன் குதித்தெ முந்து கைத்துப்பாக்கியை என் நெற்றிக்கு நேராக நீட்டி "**எனக்கு முடியும்! நான் உன்னைச் சுட்டுவிடுவேன்**" என்றான்.

இந்த அவனுடைய தீர்மானம் நான்கு, ஐந்து முறைகள் கூறப்பட்டன. இதே வார்த்தையை ஒவ்வொரு நாளும் (இருபத்து மூன்று நாட்கள்) அவன் கூறிக்கொண்டே இருந்தான். பின்பு அவனே வெறுப்போடு '**எண்ணிப்பாருங்கள், அவள், நான் விரும்பிய போது சுட முடியாது, ஏனெனில் அவளுடைய தேவன் எந்த ஆயுதமும் அவளுக்கு எதிராக வாய்க்காது என்று கூறி யிருக்கிறார்**' என்கிறாள் என்று முணு முணுத்தான். அவனால் ஏற்பட்ட மனித பயமும், துப்பாக்கியின் பயமும் என்னை விட்டு போய்விட்டது.

எனது கைக்கடிகாரத்தை ஒளித்து வைக்கச் சொன்னவன் திரும்பி வந்து அந்தக் கைக்கடிகாரத்தினை காண்பிக் கும்படி கேட்டான்.

"**அயல் நாட்டாரிடம் நல்ல கைக் கடிகாரங்கள் இருக்கின்றன, இதற்கு நான் இருபது டாலர்கள் தரட்டுமா**" என்றான் அவன்.

"**இல்லை, அதை நான் இருநூறு டாலர்கள் தந்தாலும் கொடுக்க மாட்டேன், ஏனென்றால் உனது பணம் நேர்மையாக உன்னிடம் வந்ததல்ல, உன்னிடமிருந்து ஒரு டாலர் கூட நான் பெற்றுக்கொள்வதில்லை**" என்று கூறினேன்.

"**அப்படியானால் இதற்குப் பதிலாக இன்னொரு கைக்கடிகாரத்தைத் தருகிறேன். ஒருவேளை இதைப் போல் நன்றாயிராவிட் டாலும் அது நல்ல கடிகாரம் தான்**" என்றான்.

"**நன்றி, வேண்டாம் நீ தரப் போகும் கடிகாரமும் யாரிடமாவது திருடினதாகத்தா னிருக்கும், எனவே அதை நான் பயன்படுத்த முடியாது**" என்றேன்.

'நல்லது எதுவும் செய்ய முடியாது' என்று கூறிவிட்டு அவன் கடிகாரத்துடன் சென்றுவிட்டான். வாசலில் சென்றவன் திரும்பி, "**இந்த கடிகாரத்தை நீங்கள் எனக்குத் தந்து விட்டீர்களல்லவா?**" என்றான்.

"**இல்லை நான் தரவில்லை**" என்றேன். "**நீ எடுத்துச் சென்றால் இது என்னிடம் திருடியது**" என்றேன். ஆனாலும் அவன் அதை எடுத்துச் சென்றுவிட்டான்.

ஒரு சிறு பெருமூச்சுவிட்டேன். 'இந்த கடிகாரம் இல்லாமல் நான் வாழ முடியும். இன்னொரு கடிகாரமும் நான் வாங்கிக் கொள்ள முடியும். ஆனால் நான் இந்தக் கப்பலில் இருக்கும் போது

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தை அறிந்து கொள்ள இது உதவியாயிருக்குமே' என்று ஆண்டவரோடு பேசினேன்.

அரை மணி நேரத்திற்குப்பின்பு இன்னொரு கொள்ளைக்காரன் வந்தான். அவன் களைத்துக் காணப்பட்டான். அவன் எனது மிகப்பெரிய சூட்கேசைப் புரட்டி அதன்மேல் உட்கார்ந்து கொண்டு, நான் பயப்படுவதில்லை என்றான்.

"நான் பயப்படுவது போல உனக்குத் தோன்றுகிறதா?" என்று கேட்டேன்.

"இல்லை நீங்கள் பயப்படவில்லை" என்றான்.

அவன் தொடர்ந்து, சில கொள்ளையர்கள், தளபதி சாங் என்பவரை சேர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்குச் சரியான சம்பளம் கொடுக்கப்படவில்லை, எனவே இப்போது அவர்கள் இவ்வித செயல்களில் இறங்கிவிட்டனர் என்றும் கூறினான்.

"நீ இதை சம்பாதிக்கும் வழி என்கிறாயா? நான் இதைத் திருட்டு என்கிறேன். நீ இதை உன் மனச்சாட்சிக்கு எதிராகச் செய்கிறாய்" என்றேன்.

சிறிது நேர சம்பாஷணையில் அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டு வேகமாக எழுந்தான். **"அவர்கள் உங்களிடமிருந்து எதையேனும் எடுத்தார்களா?"** என்று கேட்டான். **"ஆம் எனது கைக்கடிகாரத்தை"** என்றேன். **"யார் அதை எடுத்தார்கள்?"** என்ற கேள்வி வந்தது. எப்படியோ அதற்கு நான் பதிலளித்த போது அதைத் தருவேன் என்று கூறிவிட்டு திருப்பிக் கொடுக்கவும் செய்தான்.

"நான் ஒரு சிறு ஆலோசனை தருகிறேன். இந்த அறையை விட்டு வெளியே செல்லக்கூடாது. அப்படிச் சென்றால், இந்த அறை மறுபடியும் உங்களுக்குக் கிடையாது. உங்கள் பொருட்களும் உங்களுக்குக் கிடையாது. யாரேனும் ஏதாவது பொருட்களை எடுக்க வந்தால் தளபதி இங்கிருந்து எதையும் எடுக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார் என்று சொல்லுங்கள்" என்றான். அந்த கொள்ளையன் பிறகு எப்போதுமே அன்பாக நடந்து கொண்டாலும் அறைக்குள் பிரவேசிக்கவே இல்லை.

ஒருவர் ஒருவராக வந்து அவர்கள் கேட்ட ஒரே முதல் கேள்வி: என்னிடம் கைக்கடிகாரம் இருக்கிறதா? என்பதுதான்.

"என்னிடமிருந்து ஒருமுறை எடுக்கப்பட்டது, மறுபடியும் திரும்பக் கொடுக்கப்பட்டது. எனவே யாரும் இதைப் பெற்றுக் கொள்ள முடியாது. மேலும் தளபதி, யாரும் என்னிடம் திருடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்" என்று அவர்களிடம் சொன்னேன். அந்த வார்த்தைகளுக்கு நல்ல பலன் கிடைத்தது.

ஒரு அக்கினி மதில்

முதல் நாள் மாலை ஒரு வகை படகு கப்பலின் அருகில் வந்து நின்றது. அதில் ஏராளமான துப்பாக்கிகளும், யுத்த தளவாடங்களும் இருந்தன. எங்கள் கப்பல் கரைவழியாக மேலும் கீழுமாக சென்று கொண்டிருந்தது. கண்ணில் பட்ட எல்லா படகுகளும் கொள்ளையடிக்கப்பட்டன. என் கண்களால் எல்லாவற்றையும் என்னால் பார்க்க முடிந்தது. ஏனெனில் புதிய காற்றுக்காக நான் கதவை சிறிது திறந்து வைக்க வேண்டியதாக இருந்தது. தானியங்கள், உப்பு, மாவு இன்னும் பல பண்டங்கள் களவாடப்பட்டன. அனேக வள்ளக்காரர்கள் பயத்தோடு பீதியடைந்து நின்றனர். கொள்ளையர்களின் துப்பாக்கிச் சத்தம் அவர்கள் திருடும் போது ஒலிக்கப்படும்.

எனது உள்ளத்தில் ஒரு பேராவல் நிறைந்திருந்தது. நூற்றுக்கணக்கான பிரயாணிகளும் முப்பத்தைந்து கப்பலாட்களும் இருந்தும் ஒருவரும் கிறிஸ்தவர்களல்ல. அவர்கள் என்னிடம் ஒரு ஜீவனுள்ள சர்வவல்ல தேவன் இருப்பதைக் கண்டு கொள்ள வேண்டுமே. தேவ நாம மகிமைக்காக அது ஆச்சரியமாக நிறைவேறியது.

எனது அறையினருகில் அவர்களது தலைமை அறை இருந்தது. அங்குதான் போரைக் குறித்த ஆலோசனைகள் நடைபெறும். மெல்லிய சுவர் வழியாக அவர்கள் பேசுவதை நான் கேட்க முடிந்தது.

"அந்த மேல்நாட்டுப் பெண் இருக்கும் அறையின் கதவைப் பூட்டுங்கள்" என்று ஒருவர் கத்த, கதவும் ஒருவரால் பூட்டோடு அடைக்கப்பட்டது. அதற்கு முன்னால் திறவுகோல் உடைந்து விட்டது.

சுமார் இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. இரு கொள்ளையர்கள் கதவண்டையில் சாய்ந்து நின்றார்கள். அவர்கள் உள்ளே பார்த்துப் பார்த்து ஒருவருக்கொருவர் எதையோ மெதுவாகப் பேசிக் கொண்டனர். ஒருவன் இன்னொருவனைப் பிடித்து எனது அறைக்குள்ளே தள்ளி விட்டுக் கதவினைப் பூட்ட முயன்றான். ஆனால் திறவுகோல் உடைந்து போன படியால் பூட்ட முடியவில்லை.

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்.34:7) என்ற வசனத்தை மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டே இருந்தேன். அதே வேளையில் **"நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** (சகரியா 2:5) என்ற வசனமும் என் ஞாபகத்தில் வந்தது. அவர் என்னைச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருப்பார். எனக்கும் இந்த கொள்ளையர்களுக்கு மிடையே அவர் அக்கினி மதிலாயிருந்தார்.

பல வருடங்களுக்கு முன்பு அவ்வித அக்கினி மதிலை நான் காணும் படி கர்த்தர் கிருபை செய்தார். நடு இரவிலே நான் விழித்தபோது இந்த வார்த்தைகள் தெளிவாகவும் சத்தமாகவும் ஒலித்தன. **"கர்த்தர் தமது ஜனங்களை சுற்றிலும் அக்கினி மதிலாயிருக்கிறார்..."**. வீட்டின் கூரை வீட்டை விட்டு உயர்ந்து சென்றது. நான் அக்கினி மதிலால் சூழப்பட்டிருந்ததைக் கண்டேன். அது உயரமாகவும் கடந்து போகக் கூடாததாகவுமிருந்தது. சுவரின் அப்புறத் திலிருந்து ஆயிரக்கணக்காக அம்புகள் என்னை நோக்கி வந்தன. அவை ஆகாயத்தை இருளடையச் செய்யும் விதமாக திரளாயிருந்தன. ஆனால் நெருப்பு நாவுகள் ஒவ்வொன்றையும் விழுங்கிவிட்டன. ஒன்றுமே என்னை வந்து சேரவில்லை. நான் கதறி அழுதேன். **"கர்த்தாவே இவ்விதமாக நீர் தமது பிள்ளைகளை சுற்றிலுமிருந்து பாதுகாக்கிறீரே"** என்று ஜெபித்தேன்.

இவ்விதமான இந்தக் கடின வேளையில் அந்த அனுபவம் தெளிவாக என் மனதில் திரும்ப வந்தது. **"கர்த்தர் என்னைச் சுற்றிலும் அன்றுபோல் இன்றுமிருக்கிறார்; என்னை யாரும் தொட முடியாது; நான் சேதப்பட மாட்டேன்"** என்று எண்ணினேன்.

எனக்கே ஆச்சரியமாக நடந்தது என்னவென்றால் நான் சம்பாஷணையை ஆரம்பித்தேன். அது இயற்கையாகவும் பரிபூரணமாகவும் பிரதிபலித்தது:

"உங்கள் தாயார் ஜீவித்திருக்கிறார்களா?"

"ஆம்"

"அவர்கள் வயது என்ன?"

"ஐம்பத்தொன்று"

"அப்படியானால் நானும் அவர்களும் ஒரே வயதையுடையவர்கள்"

அவரிடம் பின்பு அவருடைய தகப்பனார் அவருடைய சகோதர சகோதரிகள் உறவினர் பற்றி விசாரிக்கப்பட்டது. நாங்கள் அதிக நேரம் சம்பாஷித்தோம். விரைவில் அவர் ஏற்கெனவே சுவிசேஷத்தைக் கேட்டவர் என்று அறிந்தோம். அவர் ஒரு மிஷனெறியைக் குறித்தும் தெரிந்திருந்தார். அவரைக் குறித்து **"அவர் உண்மையாகவே ஒரு நல்ல மனிதன். அவரை விட ஒரு நல்லவர் இந்த உலகத்தில் இருக்க முடியாது"** என்றார்.

அவர் இன்றும் தனது சொந்த பட்டணத்தில் சில கிறிஸ்தவர்களையும் அறிந்திருந்தார். ஒரு மணி நேரம் நாங்கள் சம்பாஷித்தோம். அவர் தமது வாழ்வின் சத்தியத்தைக் குறித்து அறிவிக்கப்பட்டார். இரட்சகரைக்குறித்தும் அவர் இழந்து போன கள்வர்களுக்குக் கூட வாழ்வளித்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தார். சில தடவைகள் அவர் வியாகுலப்பட்டு பெருமூச்சுவிட்டார். கண்ணீரால் அவர் கண்கள் நிரம்பின. இறுதியில் கண்ணீரோடு அறையை விட்டு அவர் வெளியேறினார். அப்புறம் நான் அவரைக் காணவில்லை.

ஜெபத்தின் வல்லமை

கொள்ளையர்கள் பிரயாணிகளை சத்தத்தால் பயமுறுத்தினர். தூங்க முடியவில்லை. இவ்வாறு ஐந்து பகலும் இரவும் வெடிப்பது போல இருந்தது.

"ஆண்டவரே தூக்கத்தின் தேவையோடு என்னை சிருஷ்டித்தீர். நித்திரையை இன்பமாக்கி இம்மட்டும் வழி நடத்தினீர்" என்று அமைதியாக ஜெபித்தேன்.

விரைவில் அமைதி ஏற்பட்டது. நிலைமை மாறியது. சில வேளைகளில் தான் துப்பாக்கி சத்தம் கேட்டது. கொள்ளையாடுதல் குறைந்தது. கொள்ளையர்கள் அங்குமிங்கும் ஓட்டமும் குறைந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் ஐந்து நாட்கள் ஒரு பலத்த நீரோட்டத்திற்கு எதிராக நான் நீந்துவது போலிருந்தது. ஆனாலும் தேவன் பலப் படுத்தினார். பின்னாட்கள் நீரோட் டத்தில் பத்திரமாக எடுத்துச் செல்லப் படுவது போலிருந்தது. என்னை எதிர்பார்த்த நண்பர்கள் ஒன்றரை நாள் காத்திருந்துவிட்டு திரும்பிச் சென்று விட்டனர். அவர்களுக்குத் தெரிந்தது, நான் பிரயாணம் பண்ணின கப்பல் சமயப்படி டியென்ஸ்டின் என்ற இடத்திலிருந்து புறப்பட்டது. ஆனால் இன்னும் வந்து சேரவில்லை என்பதுதான்.

ஐந்தாவது நாள் நண்பர்களுக்குக் கப்பல் கொள்ளையர்கள் கையில் அகப் பட்டது தெரியவந்தது. விரைவுச் செய்தி கள் அங்குமிங்குமாக அனுப்பப்பட் டன. ஜெபங்களும் அதிகமாக ஏறெடுக் கப்பட்டன. மிஷனெறிகளும் சீன கிறிஸ்தவர்களும் அதிகமாக ஜெபித்தனர். அற்புதமான பலன் கிடைத்தது.

(தொடரும்)

பாவத்தின் மேல் வெற்றி

Victory over sin

F.B.Meyer

தேவன் நம்மை கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு அவரோடு மரித்தவர்களாகப் பார்க்கிறார். அவருக் குள் உலகத்தின் பாவத்தையும் மரணத் தையும் கடந்து உயிர்த்தெழுதலின் மகிமையான உலகிற்குள் பிரவேசித் தவர்கள். இதுதான் தேவனுடைய உள்ளத்திற்குள் நமது நிலைப்பாடு. இதை நாம் மனதில் கொண்டு விசுவாசத்தால் நிஜமாக்க வேண்டும். இதில் மிகப்பெரிய வேறுபாடுகளை நாம் காணாமலிருக்கலாம். ஆனால் வித்தியாசம் உண்டு என்பதை விசுவாசிக்க வேண்டும். எனவே சோதனைகள் வரும் போது, "**நான் உனக்கு மரித்துவிட்டேன்; உனது சக்திகளை இவற்றில் ஒன்றிற்காகவும் செலவிடாதே. உனக்கு என்மேல் எந்த வலிமையு மில்லை. ஏனெனில் கர்த்தர் என் தலைமையி லிருக்கிறார்**" என்று சொல்ல வேண்டும். "**அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்**" ரோமர் 6:11.

சோதனை என்று உணர்ந்ததும் இயேசுவை நோக்கிப் பாருங்கள். பருந்து ஆகாயத்தில் பறந்து வரும் போது குஞ்சு தாய்க்கோழியின் சிறகினடியில் ஓடி தஞ்சமடைவது போல அவரிடம் வேக மாகச் செல்லுங்கள். காலையில் உங்கள் அறையை விட்டு வெளியேறு முன் உங்களை அவரது கரங்களுக்குள் ஒப்புவி யுங்கள். அவரிடத்தில் ஒப்புவித்தவை களைஅவர் பாதுகாப்பது நிச்சயம். உங்கள் அறையை விட்டு வெளியேறும் போது அவரது சிறகுகள் உங்களை மூடி பாதுகாக்கும் என்ற நம்பிக்கையுடன் புறப்படுங்கள். சோதனைக்காரன் வரும் போது, மேலே பார்த்து: "**இயேசுவே நான் உம்மை நம்புகிறேன்; நீர் என்னைப் பாதுகாத்துக் கொள்ளும்**" என்று ஜெபிக்க வேண்டும். இதைத் தான் அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசம் என்னும் கேடயம் என்கிறார். விசுவாசத்தோடு மேலே பார்ப்பது சோதனைக்காரனுக்கும் நமக்கு மிடையே கேடகமாயிருக்கிறது. பல தடவைகள் "**இயேசுவே இரட்சியும்**" என்று கூறி வாழ்க்கையில் கடந்து செல்ல வேண்டும். அவரை நம்புகிற ஒரு வரையும் அவர் வெட்கப்படவிடார். யூதா 24-ன்படி அவர் நம்மை வழுவாத படி காக்கக் கூடியவர்.

ஒரு வயது முதிர்ந்த போதகர் முதல் முதலில் இதை எனக்குப் போதித் தார். ஒரு முறை அவர் அதிகமாக எரிச்ச லூட்டப்பட்டபோது அவர் மேலே பார்த்து கிறிஸ்துவின் பொறுமையையும், சாந்தத்தையும் கேட்டார். அது முதல் வாழ்வில் பொறுமையை இழக்காமல் ஜாக்கிரதையாயிருந்தார். இளைப்பாறுத லில்லாத நேரங்களில் சமாதானம், எரிச்சலான நேரங்களில் பொறுமை, சோதனை நேரங்களில் பரிசுத்தம், பலவீன நேரங்களில் பெலன் என்று ஆண்டவரிடம் கேட்க வேண்டும். அப்படி கேட்கும்போது நேரடி செய்தி யாக பதில் கிடைத்தது. அதுவரை பாரத் தோடு இருந்தாலும், நேர்மறையான ஆசீர்வாதங்களைப் பெற்றேன். ஒவ்வொரு சோதனையும் ஒவ்வொரு புதிய தங்கமயமான அனுபவத்தைத் தந்தது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் முழுமையான அர்ப்பணத்துடன் தூய ஆவியின் கிருபையுடன் செயல்படுவது தான். ஒழுங்காக தனி ஜெபம், தனி தியானம், தனி வேதவாசிப்பு இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். வாழ்வில் ஏற்படும் தோல்விகளுக்கு உடனுடன் மன்னிப்பைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவுக்கு உன்மேலுள்ள அன்பு

Christ's love for you

George Whitefield

இயேசுவின் அன்பு உங்கள் சிந்தையில் எப்போதும் இருக்க வேண்டும்! அவரது மரணம்தான் உங்களுக்கு ஜீவனைக் கொடுத்தது. அவரது சிலுவைப்பாடுகள்தான் உங்களது பாவங்களை நிவிர்த்தி செய்தது. அவரது மரணம், அடக்கம், உயிர்த் தெழுதல் ஆகியவை அவரது பணியினை நிறைவு செய்தன. அவர் இப்போது பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் நமக்காகப் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். அவருக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அவரது அன்பின் ஆழம் அளக்க முடியாதது. அதன் ஆழம், உயரம், அகலம், நீளம் ஆகியவை மகிமையின் ராஜாவை சிங்காசனத்திலிருந்து இறங்கி வந்து நம்மைப் போன்ற புரட்சிக்காரர் களை இரட்சித்தது. நாம் இரக்கமற்றவர் களாக அவருக்கு எதிராக செயல் பட்டோம். நித்திய அழிவைத் தவிர எதற்கும் நாம் பாத்திரரல்ல. அவர் இறங்கி வந்து மனித தன்மையை தன் மீது ஏற்றுக் கொண்டார். அவர் மாம்சத்தில் காணப்பட்டு, நம்மோடு வாசம் பண்ணி னார். அவர் நமக்காக மரணத்திற்கு உட்படுத்தப் பட்டார். நமக்காகக் கிரயம் செலுத்தினார். இன்னுமாக அவருக்குள் மகிழச் செய்வார்.

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக

ஜெபியுங்கள்

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களின் விஷயத்தில் நீடிய பொறுமை யுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் லூக்கா 18:7,8.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- வாழ்க்கையில் முழு அர்ப்பணிப்பும், கிறிஸ்துவின் மேல் பாசம், வாழ்வு முழுவதையும் ஆண்டவருக்காக தியாகம் செய்தல் மற்றும் தேவனுடைய கிருபைக்காக தொடர்ந்து காத்திருக்குதல் ஆகியவை **கனிதரும்** வாழ்வுக்கு அனுகூலமானவை.
- அவரோடு **நெருங்கிய உறவு** வைக்கும் போதுதான் இந்த **வல்லமை** நம்மில் பாய முடியும். இந்த உறவு பெலவீனப்படும்போது பாய்ந்து வரும் வல்லமையும் குறைவாகும்.
- ஒரு கொடி எப்படி கனி கொடுக்கிறது? சூரிய ஒளி, காற்று போன்ற வை தொடர்ச்சியாகக் கிடைப்பதாலோ, அல்லது புத்துயிரளிக்கும் விதவிதமான தாக்கங்களால் மலர்களில் அழகு ஏற்படுவதாலோ அழகிய இலைகளாலோ அல்ல, அது செடியில் **நிலைத்திருப்பதால்** மட்டுமே.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason